# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## நான்காம் வருட கலைமாணிப் பரீட்சை - பருவம் II - 2017/2018

## PSC 4279 - அரசியலமைப்புவாதத்தின் உயர் கற்கைகள்

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் அதிகபட்சமாக **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. (i) அரசியலமைப்புவாதம் என்றால் என்ன?

   (ii) தாராண்மைவாத அரசியலமைப்புவாதத்தின் பிரதான இரண்டு தத்துவங்களைக் கலந்துரையாடுக.

   (iii) இலங்கையில் அரசியலமைப்புவாத நெருக்கடியொன்று காணப்படுகின்றது எனக் கூறுவது சரியா? உமது விடையினை விளக்குக.

2. (i) பல்கலாசார அரசியலமைப்புவாதத்தின் பிரதான அம்சங்கள் யாவை?

   (ii)நவீன தேசிய அரசுகளில் பல்கலாசார உரிமைகளை அரசியலமைப்புக்கு உட்படுத்துவதில் காணப்படுகின்ற சவால்கள் யாவை?

3. (i) குடியுரிமை என்ற எண்ணக்கருவை வரையறை செய்க.

   (ii) முழுமையான குடியுரிமைகளை வழங்குவதற்கு சட்ட ரீதியான குடியுரிமை மாத்திரம் ஏன் போதுமானது அல்ல?

4. (i) இனத்துவ சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைகளின் அரசியல் யாப்பு ரீதியான நடைமுறைப்படுத்தல்களை அடையாளப்படுத்துக

   (ii) இலங்கையில் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமைகளிற்கான கோரிக்கைகளை அரசியல் யாப்பினுள் உள்வாங்குவது தொடர்ந்தும் கடினமாகக் காணப்படுவது ஏன்?

5. (i) ஐக்கியவாத ஜனநாயகத்தை வரையறை செய்க.

   (ii)ஐக்கியவாத ஜனநாயக மாதிரி தற்கால இலங்கைக்குப் பொருந்துமா? உமது விடையினை விளக்குக.

6. குடியரசுவாத அரசியலமைப்பு மாதிரியை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

7. பின்வரும் எவையேனும் **இரண்டிற்கு (02)** குறிப்புகள் எழுதுக:

   I. நேபாளத்தில் அரசியலமைப்பு நெருக்கடி
   II. ஆலோசனை ஜனநாயகம்
   III. இனத்துவப் பேரம்பேசுதல் (Ethnic Outbidding)
   IV. ஆழமாகப் பிரிக்கப்பட்ட சமூகங்கள்

*************************